**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 190/2020**

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 24–ஆம் நாள் புதன்கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இளமுருகு | சமயம் | : |
| த/பெ | : மாணிக்கம் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

<u>வா.சா.1–ன் முதல் விசாரணை</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் இரண்டாம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். தாவா சொத்து பொறுத்து புல வரைபடம் உண்மை நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், தாவா சொத்து பொறுத்து தூய அடங்கல் உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், தாவா சொத்து பொறுத்து மாதிரி வரைபடம் உண்மை நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், தாவா சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்து பொறுத்து எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாக பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 11.11.2020 தேதியில் மாவட்ட ஆட்சியருக்கு 1ம் வாதி அனுப்பிய மனுவின் நகலும் அதன் பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.5** ஆகவும், 11.11.2020 தேதியில் மாவட்ட வருவாய் அலுவலருக்கு 1ம் வாதி அனுப்பிய மனுவின் நகலும் அதன் பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.6** ஆகவும், 11.11.2020 தேதியில்

கோட்டாட்சியருக்கு 1ம் வாதி அனுப்பிய மனுவின் நகலும் அதன் பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.7** ஆகவும், 11.11.2020 தேதியில் வட்டாட்சியருக்கு 1ம் வாதி அனுப்பிய மனுவின் நகலும் அதன் பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.8** ஆகவும், 12.11.2020 தேதியில் வட்டார வளர்ச்சி அலுவலர் த.பழூர் அவர்களுக்கு 1ம் வாதி அனுப்பிய மனுவின் நகலும் அதன் பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.